## 20

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள விசுவாசம்

## [கலாத்தியர் 5:22, 23]

*விவாகரத்து மற்றும் குடும்பத்தில் பிளவு என்பது எளிதாக இருக்கும் இந்த காலகட்டத்தில் நாம் "எப்படி என் திருமணம் நீடித்திருக்கும்?"; "எப்படி என் குடும்பம் சந்தோஷமாக இருக்கும்?"; "எப்படி குடும்ப உறவுகள் பூரணமாய் காணப்படும்?" என்பனபோன்ற கேள்விகளுக்கு பதில் தேடுவது மிகவும் அவசியமாகும். இந்த எல்லா கேள்விகளுக்கும் பதில் குடும்பத்தில் உள்ள நபர்களிடம் தான் உள்ளது. குடும்பத்தில் உள்ள நபர்கள் உண்மையான கிறிஸ்தவர்களானால், ஆவியின் கனி கொடுப்பவர்களானால், அந்த குடும்பம் நிலைத்திருக்கும், சந்தோஷமாக மற்றும் பரிபூரணமானதாக இருக்கும். "ஆவியின் கனி" என்றால் என்ன? பவுல் "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலாத்தியர் 5:22, 23) என்று எழுதினார்.*

நம்முடைய முந்தய பாடங்கள் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாய் இருந்து குடும்பத்தில் ஆவியின் கனியினை பல வகையில் நாம் செயல்படுத்தும் போது அந்த குடும்பம் சந்தோஷமாக இருக்கும் என்று காட்டினது. நாம் இப்பொழுது ஆவியின் கனியின் ஏழாவது பண்பினை பார்க்க இருக்கிறோம்: விசுவாசம் அல்லது உண்மையுள்ள தன்மை. உண்மையுள்ள தன்மை தேவனுடைய இரக்கத்தை பெற *அஸ்திபாரத்தை அளிக்கிறது.* நாம் தேவனை பிரியப்படுத்த நம் குடும்பத்தில் நம்பிக்கை மற்றும் உண்மை அவசியமானதாகும்.

கிறிஸ்தவ ஜீவியத்திற்கு விசுவாசம் தான் அஸ்திபாரம் என்பதை நாம் நன்கு அறிந்தவர்கள். இயேசு பேதுருவிடம், பேதுரு அவர் மீது வைத்த விசுவாசத்தை அறிக்கை செய்த பின்பு, "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:18) என்று சொன்னார். ஆகவே கிறிஸ்துவின் மேல் விசுவாசம், சபையின் அஸ்திபாரத்தில் ஒரு பங்காக இருக்கிறது. விசுவாசம் (நம்பிக்கை) கிறிஸ்தவனாவதற்கு அடிப்படையான தேவையாயிருக்கிறது (மாற்கு 16:16; நடபடிகள் 8:37; 16:31). பின்பு, விசுவாசத்தின் அஸ்திபாரத்திற்கு, மற்ற எல்லா கிறிஸ்தவ நற்குணங்களும் சேர்க்கப்படுகின்றன (2 பேதுரு 1:5-7). அதுபோல, உண்மை குடும்பத்தின் அஸ்திபாரமாக உருவெடுக்கிறது என்று நாம் சொல்லலாம்.

இருந்தபோதிலும், அதை காட்டிலும் நாம் அதிகமாக சொல்லலாம். உண்மையான கிறிஸ்தவ குடும்பத்திற்கு உண்மைத்தன்மை அஸ்திபாரமாயிருக்கிறது என்று நாம் உறுதியாக சொல்லலாம், அதுவே தேவனை பிரியப்படுத்துகிற குடும்பம். தேவன் இருக்கிறார் என்பதை அங்கீகரிக்காமல்

அல்லது கிறிஸ்துவின் பிரசன்னம் இல்லாமல். ஒரு குடும்பம் தன்னை இன்பகரமானதாக வைத்துக் கொள்ளலாம். இருந்தபோதிலும் உண்மைத்தன்மை இல்லாமல், ஒரு குடும்பம் நிச்சயமாக தேவனை பிரியப்படுத்துகிறவர்களாய் மற்றும் அவரிடத்தில் தயவு பெற்றவர்களாயிருப்பது என்பது சாத்தியமற்றதாகும் (எபிரெயர் 11:6 ஐப் பார்க்கவும்).

KJV மொழிபெயர்ப்பில் இந்த பண்பு "விசுவாசம்" என்றும் NASB மற்றும் பிற மொழியாக்கங்களில் "உண்மையுள்ள" என்றும் உள்ள இது என்ன? இந்த கிரேக்க வார்த்தை (*pistis*), "விசுவாசம்" என்று எப்பொழுதும் பயன்படுத்துகிற வார்த்தை,வெளிப்படுத்துகிற கருத்தானது "இயேசு கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கை, முழுமையான ஒப்புக்கொடுத்தல், முழுமையான தன்னம்பிக்கை, மற்றும் முழுமையான கீழ்ப்படிதல் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது."[1]

கூடுதலாக சொல்வோமானால், இந்த வார்த்தை மற்றும் இதற்கு தொடர்புடைய பெயருரிச்சொல் *pistos* என்பதும் மற்றவர்களுடனான நமது உறவுமுறையை சம்பந்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இந்த வார்த்தை (*pistis*) பிஸ்டிஸ் ஒரு நபருக்கும் மற்றும் மற்றோரு நபருக்கும் உள்ள உறவுகளில் செயல்படுத்தும் போது, அந்த வார்த்தை "உண்மையுள்ள" என்ற வார்த்தைக்கு இணையானது. வில்லியம் பார்க்ளே, இவ்வாறு கூறினார்,

> ... இவைகள் ஒரு மனிதனை நாம் முழுவதுமாக நம்புவதும் அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு ஏதுவாகும்படி நம்பகத் தன்மை கொண்ட குணமாகும் ... சிறந்த மொழியாக்கத்தில் அடிக்கடி வெளிப்படுவது விசுவாசம் உள்ள என்பதாகும்.[2]

''விசுவாசமுள்ள'' அல்லது ''உண்மையுள்ள'' என்று இந்த பகுதியில் உபயோகப்படுத்தின வார்த்தையை விவரிக்க ஒரு வேளை சிறந்த வழியாக இருக்கலாம்.

குடும்பம் தேவனை பிரியப்படுத்துகிற குடும்பமாயிருக்க வேண்டுமானால் உண்மைத்தன்மையை மூன்று பகுதிகளில் கற்றுக் கொடுப்பதும் மற்றும் பயிற்சி செய்வதும் அவசியம்.

## பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ள தன்மை

முதலாவது, குடும்பமானது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உண்மையுள்ள தன்மையை முதன்மைப்படுத்த வேண்டும். பிஸ்டோஸ் என்னும் பெயருரிச்சொல் சில சமயங்களில் பொறுப்புகளை நிறைவேற்றும் உண்மையுள்ளதன்மையைக் குறிப்பதற்கு உதாரணமாக வேலை செய்யும் இடத்தில் - உபயோகப்படுத்தப்படுகிறது - உக்கிராணக்காரன் ''உண்மையுள்ளவராய்'' இருக்க வேண்டும் என்று வேத எழுத்துகள் காண்பிக்கிறது (1 கொரிந்தியர் 4:2). ஒரு உக்கிராணக்காரன் தன் எஜமானுடைய வீட்டு உடைமைகளின் பொறுப்பாளியாகவும் "உண்மையுள்ளவன்" என்றும் பேசப்படுகிறான் (மத்தேயு 24:45; லுக்கா 12:42), மற்றும் ஒரு வேலைக்காரன் செம்மையாக வேலை செய்கிறபோது அவனை "உத்தமமும் உண்மையுள்ள" "வேலைக்காரன்" என்று அழைக்கிறது (மத்தேயு 25:21, 23; பார்க்க லூக்கா 19:17).

மேலும் சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றுபவர்கள் "உண்மையுள்ளவர்" என்று பேசப்படுகின்றனர்.[3]

தற்காலத்தில் இதன் அர்த்தத்தில் பெரும்பாலான வேலையாட்கள் ''உண்மையுள்ளவர்களாக'' மற்றும் நம்பிக்கைக்குரியவர்களாக இருப்பதில்லை. விழிப்பாயிராவிட்டால் தங்கள் வேலையாட்கள் வேலைக்கு சரியான நேரத்திற்கு வருவதோ தங்கள் வேலைகளை சரிவர செய்வதோ கிடையாது, அதற்கு நம்பத்தக்கவர்கள் அல்ல என்று அநேக முதலாளிகள் கூறுகின்றனர்.

பிள்ளைகள் எங்கு நம்பத்தக்கவர்களாகவும் மற்றும் உண்மையுள்ளவர்களாகவும் நல்ல வேலையாட்களாகவும் இருப்பதற்கு கற்றுக் கொள்ளுகிறார்கள்? குடும்பத்தில்தான்! அவர்கள் கட்டளைகள் மூலம், அனுபவத்தின் மூலம் மற்றும் உதாரணத்தின் மூலமாக கற்றுக் கொள்ளுகிறார்கள், சிறுவயது முதல் பொறுப்புகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் மற்றும் அவர்கள் அந்த பொறுப்பினை உண்மையாய் செய்து முடிக்க வேண்டும்.

## தன் வாழ்க்கைத் துணைக்கு உண்மையாய் இருத்தல்

இரண்டாவது, குடும்பமானது தன் வாழ்க்கை துணையிடம் உண்மையாய் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். திருமண பந்தமானது இருவருடைய ஒருமித்த நம்பிக்கையில் கட்டப்படுகிறது. ஒரு புருஷன் அல்லது மனைவி தன்னை முழுமையாக மற்றவருக்காக ஒப்புக்கொடுக்கும் போது; அந்த ஒப்புக்கொடுத்தலின் உண்மைத்தன்மை மரணபரியந்தம் இருக்க வேண்டும், அந்த வாக்குறுதியானது எவர்ஒருவரும் தன் துணையைத் தவிர எந்த அந்நியருடன் உடலுறவு வைத்துக் கொள்வது என்பதை முற்றிலுமாக தவிர்ப்பதாகும். எப்பொழுது ஒரு புருஷன் அல்லது மனைவி அந்த உறுதியினை மீறுகிறார்களோ அப்போது நாம் அதனை "விசுவாச துரோகம் என்று அழைக்கிறோம்" - இது உண்மைத் தன்மைக்கு எதிர்மறை ஆனாது.

தற்காலத்தில் திருமண நிகழ்ச்சியில் மணப்பெண் மற்றும் மணமகன் செய்து கொள்ளும் பிரதிக்கினைகளுக்கு உண்மையாக இருப்பதில்லை. இந்த இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில், உலகில், தன் வாழ்க்கைத் துணையோடு உண்மையாய் இருப்பதை பார்ப்பது ஆச்சரியமாக இருக்கலாம். நிச்சயமாகவே, இந்த உலகம் பல வழிகளில் மக்களை ஒழுங்கற்று நடக்க தூண்டி விடுகிறது.

### ஏன் மக்கள் தங்கள் வாழ்க்கை துணையோடு உண்மையற்றவர்களாய் இருக்கின்றனர்?

*சமுதாய ஏற்பு.* நாம் விபசாரம் மற்றும் வேசித்தனத்தில் ஈடுபடும் மக்கள், கள்ளத் தொடர்பு உள்ளவர்கள், மற்றும் தங்கள் புருஷன் அல்லது மனைவியை வஞ்சிப்பவர்கள் மத்தியில் வாழ்கிறோம், நமக்கு சரியான செயல்கள் செய்ய வேண்டும் என்று ஆசை இருந்தும், நாமும் மற்றவர்களைப் போல சமானமான அழுத்தத்தினால் ஆசைக்குள்ளாகலாம். குறைவாக சொல்வோமானால், நாம் ஒருவேளை, கிட்டத்தட்ட உள்ளுணர்வில், நம்மை சுற்றி இருப்பவர்களால் விபசாரம் ஒரு மிகப் பெரிய குற்றம் அல்ல என்று நாம் நினைக்கும்படி

செய்யப்படுகிறோம்.

*சுலபமான விவாகரத்து.* இன்று அநேக சமுதாயத்தில், விவாகரத்து ஒரு இழிவான காரியமாக பார்ப்பது கிடையாது. விவாகம் ஒரு விவாகரத்தில் "மாத்திரம்" முடியுமானால் விபசாரம் ஒரு மிக கொடிதான பாவம் என்று நினைப்பது கிடையாது.

*பொது ஜனத் தொடர்பின் தாக்கம்.* பொழுதுபோக்கு நிறுவனங்கள் தொடர்ச்சியாக கள்ளத் தொடர்பு வைத்திருப்பவர்கள் எந்தவிதமான மோசமான விளைவுகளை அனுபவிப்பதில்லை என்றே விவரிக்கின்றன. அப்படிப்பட்ட கள்ளத் தொடர்புகள் தொடர்ந்து காண்பிக்கப்படுகின்றன - அது விவாகரத்திற்கு வழிவகுக்கிறதோ அல்லது புதிய திருமணத்திற்கு வழி வகுக்கிறதோ இல்லையோ ஆனால் அது மிக அழகாக, அன்பான உறவுகளால் திருமண உறவை விட அது மிகுந்த திருப்திகரமாகவும் மற்றும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும் காண்பிக்கப்படுகின்றன.

*ஆசையைத் தூண்டும் உடைகள் மற்றும் நடக்கை.* நம்மை சுற்றிலும், மக்களுடைய உடைகள் மற்றும் அவர்கள் நடக்கை புருஷனுக்கு அல்லது மனைவிக்கு துரோகம் செய்ய தூண்டுவதாகவே இருக்கிறது. நவ நாகரீகம் என்பது கற்புடைமையை உற்சாகப்படுத்துவதல்ல. பெரும்பாலான நவநாகரீக உடைகள் கவர்ச்சியான தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. மக்கள் அடிக்கடி வேண்டுமென்றே தங்கள் உடைகள் மற்றும் செயல்களினால் எதிர் பாலினை இச்சிக்க வைக்க செயல்படுகின்றனர். இந்த உலகில் வாழ்கின்ற மக்கள் அனுதினமும் பாவம் செய்வதற்கு தூண்டப்படுகின்றனர்.

***ஏன் மக்கள் தங்கள் துணைக்கு உண்மையாயிருக்க வேண்டும்?***

நம்மை இந்த உலகம் உண்மையற்றவர்களாக இருக்க தூண்டும் போது, நாம் ஏன் நம் துணைகளோடு உண்மையாய் இருக்க வேண்டும்?

*ஏனென்றால் தேவனுக்கு அது தேவைப்படுகிறது.* தேவனுக்கு அது தேவைப்படுகிறதால் கிறிஸ்தவர்கள் தங்கள் திருமணத்தில் உண்மையாய் இருக்க வேண்டும். எபிரெயர் 13:4, "விவாகம் யாவருக்குள்ளும் கன*முள்ளதாயும் விவாகமஞ்சம்* அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" என்கிறது. (வலியுறுத்தம் என்னுடையது.) தேவனை பிரியப்படுத்த விரும்புகிறவர்களுக்கு இந்த காரணம் போதுமானது.

*திருமண உறவில் புனித தன்மைக்காக.* கிறிஸ்தவ கணவன் மற்றும் மனைவிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டும் ஏனென்றால் திருமண உறவில் தாம்பத்தியம் புனிதமானது; உண்மையான அர்த்தத்தில் இந்த காரியத்தில் தான் திருமணதம்பதிகள் "ஒன்றாய்" இருக்கின்றனர் (மத்தேயு 19:5). இந்த இரண்டுமே அடையாளமாகவும் மற்றும் ஒன்றாய் இருப்பதற்கு காரணமாயிருக்கிறது. திருமணத்தில் தாம்பத்திய உறவில் உள்ள புனிதத்தன்மை நிச்சயமானது, ஏனென்றால் இயேசு விவாகரத்திற்கு விபசாரம் ஒன்றே சட்டப்பூர்வமான காரணம் என்று அனுமதித்தார் (மத்யேு 19:9).

*ஏனென்றால் நாம் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.* நாம் நம் வாழ்க்கை துணைக்கு உண்மையாய் இருக்க வேண்டும், ஏனென்றால் நாம் அப்படி இருப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறோம். நாம் உண்மையுள்ளவர்களும் மற்றும்

நம்பிக்கைக்குரியவர்களுமானால், நாம் அந்த வாக்குறுதியை மீறமாட்டோம்.

*ஏனென்றால் அதின் பின் விளைவுகளுக்காக.* ஆவிக்குரிய உட்படுத்துதலைத் தவிர, நாம் நம் வாழ்க்கை துணைக்கு உண்மையாய் இருக்க வேண்டும் ஏனென்றால் இந்த வாழ்வின் உண்மையற்ற தன்மையின் பின்விளைவுகளுக்காக. அந்த பின்விளைவுகள் தான் என்ன?

*(1) உண்மையற்று இருத்தலின் பின்விளைவுகள்.* திருமண பந்தத்தில் ஒருநபர் விபசாரத்தில் ஈடுபட்டால் அதன் தொடர்ச்சி என்ன? இரண்டு சாத்தியகூறுகள் உள்ளன.

முதல் சாத்தியகூறு என்னவென்றால் எவர் ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள். உண்மையில், விபசாரம் சாதாரணமாக கண்டுபிடிக்கப்படும்; ஆனால் கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், மனசாட்சியினால் பிரச்சனை ஏற்படும். விபசாரக்காரர் தன் வாழ்நாள் முழுவதும் குற்றஉணர்ச்சியால் கர்ப்ப வேதனைப்படுவார். இந்த தொடர்பு வைத்ததினால் மற்றோரு நபரும் சம்பந்தப்படுத்தப்படுகிறார்! விபசாரத்தில் ஈடுபடும் போது குற்றமற்ற வாழ்க்கை துணைக்கு எதிராக பாவம் செய்வது மட்டுமல்ல; விபசாரத்தில் ஈடுபட்ட மற்ற நபருக்கு விரோதமாக சட்டத்திற்கு புறம்பேயும் பாவம் செய்கிறோம்.

இரண்டாவது சாத்தியகூறு என்னவென்றால் தங்களுடைய *உண்மையற்ற தன்மை வெளிப்படும்.* பின்பு என்ன சம்பவிக்கும்? மீண்டும், இரண்டு சாத்திய கூறுகள் உள்ளன.

ஒரு சாத்தியகூறு, விவாகரத்தை தடுக்கக்கூடும். இருப்பினும், விவாகரத்து நடக்கவில்லை என்றாலும், திருமண உறவில் கறை மற்றும் விகாரம் அழியாததாய் என்றும் காணப்படும்.

மற்றொரு சாத்திய கூறு என்னவென்றால் *விவாகரத்து தொடரலாம்.* குடும்பத்திலுள்ள ஒரு நபரினிமித்தம் அவருடைய ஒரு நிமிட உண்மையற்ற தன்மை குடும்பத்திலுள்ள மற்ற எல்லாரிடமும் நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. இயேசு விவாகரத்தை அனுமதித்தார், ஆனால் அதை ஊக்கப்படுத்தவில்லை.

*(2) விவாகரத்தின் பின் விளைவுகள்.* இந்த "விடுதலையான" காலத்திலும் கூட, பல சமுதாயத்தில் விபசாரம் இன்னும் உத்தியோகபூர்வமாக முகம்சுளிக்க செய்கிறது மற்றும், ஆராய்ச்சியின் அடிப்படையில், திருமணத்தின் பிரிவுக்கு விபசாரமே பெரிதான காரணமாக கருதப்படுகிறது. அதனால், திருமண வாழ்வில் ஒரு நபர் விபசாரத்தில் ஈடுபட்டால், விவாகரத்து தொடரும். உண்மையற்ற தன்மையால் விவாகரத்து விளையும்போது விவாகரத்தினால் இருவருக்கும் - "குற்றத்தில் உள்ள ஒருவர்" (விபசாரத்தில் ஈடுபட்ட அந்த நபர்) மற்றும் "குற்றமற்ற தரப்பு" (உண்மையுள்ள துணை) - மற்ற அனைவருக்கும் கூட விளைவுகள் ஏற்படும்.

*"குற்றமுள்ள தரப்பு" என்னவாகும்?* இயேசு இந்த கேள்விக்கு தெளிவாய் இருந்தார், ஆனால் இந்த போதனை கடினமானது (காண்க மத்தேயு 19:9). மேலும், விட்டுச் செல்கிற அந்த நபர் தன் பிள்ளைகளுக்கு உதவித்தொகை அல்லது ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும். இந்த கூடுதல் செலவுகள் பல ஆண்டுகளுக்கு பயங்கரமான பொருளாதார பளுவைக் கொடுக்கும் - ஒருவேளை அவனுடைய அல்லது அவளுடைய மீதமான வாழ்நாள் முழுவதுமாக இது

நீடிக்கும். கூடுதலாக, அந்த பெற்றோரில் ஒருவர் தன் அன்பான குழந்தையை எப்பவாவது ஒருமுறை தான் காணமுடியும்.

அந்த உண்மையற்ற நபர் மறுமணம் செய்து கொண்டால் என்ன நடக்கும்? அந்த புருஷன் எந்த நபரிடம் கள்ள உறவு வைத்திருந்தாரோ அவரையே திருமணம் செய்து கொண்டால், ஆனால் - இச்சையை அடிப்படையாக கொண்ட - அப்படிப்பட்ட திருமணம் நிலைத்திருக்குமா? திருமணமான ஒரு நபரிடம் கள்ளத் தொடர்பு வைத்துக் கொண்ட அந்த ஸ்திரீயை, எந்த அளவிற்கு அந்த மனிதன் நம்பமுடியும்? எப்படி அவள் மீண்டும் வேறு ஒரு கள்ளத் தொடர்பில் ஈடுபடமாட்டாள் என்று உறுதியாக நம்பமுடியும்? அப்படியே, அவளும் புருஷனை எப்படி நம்பமுடியும்? அவன் தன் முதல் மனைவிக்கு உண்மையற்றவனாய் இருந்தானே; பின்பு ஏன் அவன் இரண்டாவது மனைவிக்கு உண்மையாய் இருக்க வேண்டும்? அந்த நபர் அவளையோ அல்லது வேறொருவரையோ திருமணம் செய்து கொண்டால் (விவாகரத்திற்கு பின்பு) புள்ளிவிவரத்தின்படி, முதல் திருமணத்தை விட இரண்டாவது திருமணங்கள் வெற்றியடைந்தது கிடையாது என்பதை அவன் அறிந்து கொள்வது அவசியமாயிருக்கிறது.

*"குற்றமற்ற தரப்புக்கு" என்னவாகும்?* விபசாரத்தில் ஈடுபடாத அந்தநபர் குற்ற உணர்ச்சியோடு இருக்க நேரிடலாம். மெய்யாகவே, சில சமயங்களில் "குற்றமற்ற தரப்பு" குற்ற உணர்வோடு இருப்பதுண்டு. சில நிகழ்வுகளில், உதாரணமாக, மனைவியானவள் உண்மையில் குற்றமற்றவராக இருப்பதில்லை, ஆனால் நடைமுறையில் உண்மையற்ற அவள் புருஷனை மற்ற பெண்களின் கரங்களுக்குள் விழச்செய்தாள். இருப்பினும், அவள் அல்லது அவன் முற்றிலுமாக குற்றமற்றவனாய் இருந்தாலும், பாதிக்கப்பட்ட அந்த வாழ்க்கை துணை இவ்வாறு ஆச்சரியப்படுவாள். என் துணை விபசாரத்தில் ஈடுபடுவதற்கு "நான் என்ன செய்தேன் அல்லது என்ன செய்ய தவறிவிட்டேன்." உண்மையில், எல்லா சமயங்களிலும் திருமண உறவு பிரிவுபடும்போது, அதில் ஈடுபட்டுள்ள புருஷன் மற்றும் ஸ்திரீ தோல்வியை - ஏதோ தங்கள் வாழ்க்கையின் முக்கியமான பகுதியில் தோல்வி அடைந்தது போன்று - உணருகின்றனர்.

ஒரு நபர் குற்றமற்றவராய் இருந்தாலும், விவாகரத்து ஒரு சிறந்த வாழ்க்கையை கொடுக்க வேண்டிய அவசியமில்லை. பொருளாதார நெருக்கடி உண்டு … பிள்ளைகள் இருப்பவர்களானால் விசேஷித்த சவால்களை பிள்ளைகளை வளர்ப்பதில் சந்திக்க வேண்டும், திருமணம் செய்து கொள்ளாமல் இக்கட்டான சூழ்நிலைகளை அனுசரித்து கொள்வது … மற்றொரு துணையை தேடுவதில் குழப்பங்கள் ஆகியவை. எப்படி விவாகரத்து ஆன ஒரு நபர் இரண்டாவது திருமணத்தில் சிறந்த வாழ்க்கை துணையை கண்டு கொள்ளுவது நிச்சயம்? ஒரு நியாயமற்ற விவாகரத்தினால் ஏற்படும் விளைவு பொதுவாகவே "குற்றமற்ற தரப்புக்கு" பெரியதாயிருக்கும், இருந்தாலும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் "குற்றமுள்ள தரப்பினரால் ஏற்பட்டதாகும்."

*உடன் இருக்கும் குற்றமற்றவர்களின் நிலைமை என்ன?* இயல்பாக, விவாகரத்து ஆன தம்பதியினரின் பிள்ளைகள் பாதிக்கப்படுவர், மேலும், விவாகரத்து ஆன கணவன் மற்றும் மனைவியின் பெற்றோர்களையும் பாதிக்கும். பாட்டன் பாட்டிக்கும் பாதிப்பு ஏற்படலாம். சபை மற்றும் சமுதாயமும் பாதிக்கப்படலாம். இந்த விவாகரத்தினால் எல்லாரும் பாதிக்கப்படுகின்றனர்!

இந்த பாடத்தின் நோக்கம் ஒவ்வொரு வகையிலும் விவாகரத்தை கண்டனம் செய்யவேண்டும் என்பதோ, அல்லது விவாகரத்து மற்றும் மறுமணம் செய்யும் குற்றமற்ற தரப்பின் "உரிமையைப்பற்றி" கேள்வி எழுப்புவதோ அல்ல. மாறாக, நம்பிக்கை துரோகியின் மோசமான பின் விளைவுகளை காண்பிப்பதற்காகத்தான். *பெரும்பாலான பிரச்சனைகள் உண்மையற்ற வாழ்க்கை துணையினால் ஏற்படுவதே!* "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்று தேவன் சொன்னதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை (யாத்திராகமம் 20:14; பார்க்க ரோமர் 13:9). அது நம்முடைய சொந்த நன்மைக்காகவே!

## தேவனுக்கு உண்மையாயிருக்க வேண்டும்

மூன்றாவது, குடும்பமானது தேவனிடத்தில் உண்மையாய் இருக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். தோமஸ் பி. வாரன் என்பவர் "திருமணம் என்பது தேவனை மற்றும் ஒருவரையொருவர் நேசிப்பவர்களுக்கு"[4] என்று சொன்னார். குடும்பமானது தேவனிடத்தில் அன்புகூருவதையும் மற்றும் அவரிடத்தில் உண்மையாயிருப்பதையும் வலியுறுத்த வேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக்குறித்த பொறுப்புக்களில் தேவனுக்கு உண்மையாயிருப்பதை வலியுறுத்துவது என்பது பெற்றோர்களுக்கு மிக முக்கியமானது. கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் விசுவாசத்தை தங்கள் பிள்ளைகளுக்கு பரிமாற்றம் செய்வது அவர்களது கடமையாகும். எப்படி?

### போதிப்பதினால்

கிறிஸ்தவ பெற்றோர்களாய், நாம் அவர்களுக்கு போதிக்கும்போது தமது விசுவாசத்தை அவர்களுக்கு பரிமாற்றம் செய்யவேண்டும். நாம் எல்லா வேளைகளிலும் ஒவ்வொரு வழியிலும் அவற்றை போதிக்க வேண்டும். உபாகமம் 6:6, 7ல் இஸ்ரவேல் பெற்றோர்களிடம் தேவன் என்ன எதிர்பார்த்தாரோ அவற்றை நாமும் செய்ய வேண்டும்:

> இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசி.

போதிப்பது என்பது ஒரு இடம் மற்றும் சமயத்தை முன் குறித்து செய்ய வேண்டியதுதான், ஆனால் எப்பொழுதெல்லாம் தேவையோ அப்பொழுதொல்லாம் செய்ய முடியும் மற்றும் செய்ய வேண்டும். நற்பலன் அடையக் கூடிய போதனைகள் திட்டம் இல்லாமலும் மற்றும் தற்செயலாகவும் எந்த வேளையிலும் மற்றும் ஒவ்வொரு வேளையிலும் கொடுக்க முடியும். எந்த ஒரு வகையான செயல்களின் தொடர்பாக. போதிக்கிறதான வாய்ப்பு எந்த சூழ்நிலையிலும் ஏற்படும்.

### உதாரணத்தின் மூலம்

கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் உண்மைத்தன்மையை போதிப்பதினால் மட்டும் அல்லாமல், ஆனால் முக்கியமாக தங்கள் உதாரணத்தினால் பிள்ளைகள்

மனதில் பதியவைக்கின்றனர். பிள்ளைகள் கற்றுக் கொள்வது அதிகமாக எந்த ஒரு காரியம் அநுதினம் மற்றும் வாரா வாரம் முதன்மையாக பார்க்கிறார்களோ அவற்றில் கற்றுக் கொள்கிறார்கள். சான்றாக, ‘‘விசுவாசம்’’ தங்கள் பெற்றோர்களுக்கு எவ்வளவு முக்கியம்? இந்த கேள்விக்கு சிறு பிள்ளைகள் கூட இதற்கு பதில் கூறுவர். எப்படியென்றால் தங்கள் பெற்றோர்கள் எந்த அளவிற்கு ஜெபம் செய்வதிலும் மற்றும் வேதத்தை வாசிப்பதிலும் சமயம் செலவிடுகின்றனர், அவர்கள் குடும்பமாக தியானத்திற்கு சமயம் செலவிடுகிறார்களா இல்லையா, அவர்கள் வளர்ந்து வருகிற போது தங்கள் பெற்றோர்கள் என்ன ஆவதற்கு அல்லது என்ன செய்வதற்கு உற்சாகப்படுத்துகிறார்கள், மற்றும் முக்கியமாக அவர்கள் சபைக்கு தங்கள் வாழ்வில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை கவனிக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் சபைக்கு உண்மையாயிராவிட்டால் அவர்கள் தேவனுக்கு உண்மையாயிருக்க முடியாது! *நாம் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதை குடும்பத்தில் எடுத்துக்காட்ட வேண்டுமானால், நாம் சபைக்கு போவதில் உண்மையாயும் மற்றும் கொடுத்தலில் உண்மையாயும் இருப்பதில் தொடங்க (முடிக்க அல்ல) வேண்டும்!*

## முடிவுரை

‘‘உண்மையாயிருத்தல்’’ என்பது விசுவாசமாயிருத்தலாகும். குடும்பத்தில் நாம் ஏற்றுக் கொண்டுள்ள நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உண்மையாய் இருக்க வேண்டும். நம்முடைய திருமண வாக்குறுதிக்கு உண்மையாய் இருக்க வேண்டும், மற்றும் தேவனுக்கு உண்மையாய் இருக்க வேண்டும், மற்றும் இப்படிப்பட்ட உண்மையில், தேவனுக்கு பிரியமான குடும்பத்தை நாம் கட்டமுடியும்.

இதற்கு எதிரிடையாக இப்படிப்பட்ட உண்மையில்லை என்றால் - வேலையில், திருமணத்தில், மதத்தில் உண்மையாயிருத்தல் - வேறு எந்த வழியிலும் நாம் தேவனை பிரியப்படுத்த முடியாது. எவர் ஒருவர் தன் உக்கிராண உத்தியோகத்தில் உண்மையற்றவர்களானால், திருமணத்தில் உண்மையற்றவர்களானால், மற்றும் தேவனுக்கு உண்மையற்றவர்களானால் அவர்கள் மனந்திரும்பாவிட்டால் இரட்சிக்கப்பட முடியாது. வெளிப்படுத்தின விசேஷம் 21:8ன் படி பரலோகத்தில் தங்கள் குடும்பத்தைக் கொண்டிராதவர்களின் மத்தியில் ‘‘அவிசுவாசிகள்’’ (விசுவாசமில்லாதவர்கள்) இருப்பார்கள். இந்த வார்த்தை நாம் இந்த பாடத்தில் குடும்பத்திற்கு உபயோகப்படுத்தின வார்த்தைக்கு நேர் எதிர்மறையானது.

நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் வாழத்தொடங்குவதற்கு, உங்களுக்கு விசுவாசம் வேண்டும். இயேசுவினிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். பின்பு, நம்பிக்கை வைத்து, நீங்கள் கீழ்ப்படிய வேண்டும்.

---

குறிப்புகள்

[1]William Barclay, *Flesh and Spirit: An Examination of Galatians 5:19-23* (Grand Rapids, Mich.: Baker Book House, 1962), 107-8. [2]Ibid., 108. [3]பார்க்க *1 தீமோத்தேயு 1:12; 2 தீமோத்தேயு 2:2; 1 கொரிந்தியர் 4:17; எபேசியர் 6:21; கொலொசெயர் 1:7; 4:9; 1 பேதுரு 5:12; 3 யோவான் 5.* (Barclay, 109-10.) [4]Thomas B. Warren, *Marriage Is for Those Who Love*

*God-and One Another* (Fort Worth, Tex.: Warren Publications, 1962).